
தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது
# தின கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்





Vol: 02 | Issue: 60 | 4 Pages | 29.9.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 60 | 4 பக்கங்கள் | 29.9.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கணைகொடியது யாழ்கோடு செவ்விதாங் கனை**
**வினைபடு பாலாற் கொளல்**

**விளக்கம்:**
நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது. மக்களின் பண்புகளையும் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## ஹிஸ்புல்லா தலைவரை குறிவைத்து பெய்ரூட்டில் பயங்கர தாக்குதல் நடத்திய இஸ்ரேல்



காசா, செப். 29

காசா மீது தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல், தற்போது வடக்குப் பகுதியில் இருந்து வெளியேறிய இஸ்ரேல் மக்களை மீண்டும் பாதுகாப்பாக அதே பகுதியில் குடியமர்த்த முடிவு செய்துள்ளது. இதனால் லெபனான் தெற்குப் பகுதியில் ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த வாரம் ஏற்கனவே நடத்திய பயங்கர தாக்குதலில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த நிலையில் நேற்று லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லா தலைமை அலுவலகம் மீது பயங்கர வான்தாக்குதல் நடத்தியது.

இந்த தாக்குதலில் கட்டடம் கடும் சேதம் அடைந்துள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் ஹஸ்ரல்லா உள்ளிட்டோரை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிகிறது.

இந்த தாக்குதலில் குறைந்தது 6 பேர் பலியாகியிருக்கலாம். 91 பேர் காயம் அடைந்துள்ளனர் என லெபனான் சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபையில் உரையாற்றிய நேதன்யாகு, ஹிஸ்புல்லாவிற்கு எதிரான தாக்குதல் முழுவீச்சில் தொடரும் எனக் கூறினார். அவர் பேசிய உடனே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நேரடி போர் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## ஜப்பான் பிரதமராக ஷிகெரு இஷிபா தேர்வு.. அணுசக்தி எதிர்ப்பு முதல் பாதுகாப்பு அமைச்சர் வரை யார் இவர்?



ஜப்பான், செப். 29

ஜப்பானில் லிபரல் டெமாக்ரடிக் கட்சியைச் (LDP) சேர்ந்த பிரதமர் ஃபுமியோ கிஷிடா (Fumio Kishida) தலைமையிலான ஆட்சி கடந்த 2021 அக்டோபர் முதல் நடந்து வந்தது. ஊழல் மற்றும் மோசடி புகார்களில் சிக்கிய கிஷிடாவின் ஆட்சியில் விலைவாசி உயர்வு, அரசியல் சர்ச்சைகள் ஆகியவற்றால் ஜப்பான் மக்கள் அதிருப்தியில் இருந்தனர்.

இதனால் மக்களுக்கு தன் மீது நமபிகை இல்லையென்றால் சுமுகமான ஆட்சியை வழங்க முடியாது என்று கூறி தான் பிரதமர் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாக கிஷிடா கடந்த மாதம் அறிவித்திருந்தார். அதன்படி கிஷிடா பதவி விலகிய நிலையில் ஆளும் கட்சியில் சார்பில் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சித் தேர்தல் இன்று [செப்டம்பர் 27] பிற்பகலில் நடைபெற்றது.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இம்முறை 9 பேர் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட்டனர். அதில் 3 பேர் இறுதிப் பட்டியலுக்குத் தேர்வாகிய நிலையில் வேட்பாளராகப் போட்டியிட்ட ஜப்பான் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஷிகெரு இஷிபா (Shigeru Ishiba) (67வயது) அதிக வாக்குகள் பெற்று கட்சி உறுப்பினர்களால் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதன்படி வரும் அக்டோபர் 1 ஆம் தேதி ஜப்பான் பிரதமராக பதவியேற்க உள்ளார். அரசியல் குடும்பப் பின்னணியில் இருந்து வந்த இஷிபா டோட்டோரி கிராமப்புற பகுதியை சேர்நதவர் ஆவார். 1986 இல் தனது 29 வது வயதில் LDP நாடளுமன்ற உறுப்பினரான இஷிபா பாதுகாப்பு மட்டுமின்றி விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் பதவிகளையும் வகித்த கட்சியின் மூத்த தலைவர் ஆவார்.

மிதவாத போக்கை கொண்டுள்ள இஷிபா ஜப்பான் அணுசக்தியை சார்ந்திருப்பதை எதிர்ப்பவர் ஆவார். சீனா, வட கோரிய நாடுகளால் அதிகரித்து வரும் ஆபத்தை தொடர்ந்து வெளிப்படுத்தி வருபவராக இஷிபா உள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டு தேர்தலில் அப்போதைய பிரதமர் சின்ஷோ அபேவை எதிர்த்து தோல்வியடைந்தார். இந்நிலையில் தற்போது பிரதமராகியுள்ள ஷிகெரு இஷிபா தலைமையிலான ஜப்பானின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# சி.பா.ஆதித்தனார் ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம் முதல்வர்





சென்னை, செப். 29

"தமிழர் தந்தை" சி.பா.ஆதித்தனாரின் 120வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது. சி.பா.ஆதித்தனாரின் பிறந்தநாள் 2019ம் ஆண்டு முதல் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி சென்னை எழும்பூர் ஆதித்தனார் சாலையில் உள்ள சி.பா.ஆதித்தனார் சிலை முன்பு வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மீன் வளத்துறை அமைச்சர்அனிதாராதாகிருஷ்ணன், சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன், பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

எளிய மக்களுக்கு உலக நடப்புகளைக் கொண்டு சென்று தமிழ் இதழியலின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவரும், கழக ஆட்சியில் சட்டப்பேரவைத் தலைவராகவும் அமைச்சராகவும் இருந்து அளப்பரிய சேவை புரிந்தவருமான சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்தநாளில், அவர் ஆற்றிய நற்பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்! என்று தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அரசு நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருவதாக அப்பகுதி சேர்ந்தவர்கள் சிலர் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார்



விழுப்புரம், செப். 29

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கெங்கபுரம் கிராமத்தை சேர்ந்த மோகன்ராஜ் என்பவர் அரசு நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருவதாக அப்பகுதி சேர்ந்தவர்கள் சிலர் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்திருந்தனர்

இதன் அடிப்படையில் வட்டாட்சியர் தனலட்சுமி தலைமையில் இன்று நடைபெற்ற சமாதான பேச்சு வார்த்தையில் முரண்பாடு ஏற்படாத நிலையில் தன்னுடைய நிலத்தை 23 பேர் அபகரிக்க முயல்வதாக தற்கொலை கடிதம் எழுதி வைத்துக் கொண்டு கையில் இருந்த பெட்ரோல் ஊற்றி தனது உடலில் தீ வைத்துக் கொண்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

தீச் காயங்களுடன் மோகன்ராஜ் மீட்டு வளர்த்தி போலீசார் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயி பெட்ரோல் ஊற்றி உடலில் தீ வைத்துக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

## சிவகங்கை மாவட்டத்தில் தீபாவளி பண்டிகை முன்னிட்டு கோஆப்டெக்ஸில் சிறப்பு தள்ளுபடி



சிவகங்கை:செப் 29

சிவகங்கை மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோஆப்டெக்ஸ்விற்பனைநிலையத்தில் சிறப்பு தள்ளுபடி விற்பனை பொருட்களை மாவட்ட ஆட்சியர் துவங்கி வைத்தார்.

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில் கோஆப்டெக்ஸ் சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் துவங்கி வைத்தார்,சிவகங்கையில் செயல்பட்டுவரும்கோஆப்டெக்ஸ் நிலையத்தில் 30% சிறப்பு தள்ளுபடி கைத்தறி மற்றும் வீட்டு உபயோக பொருட்களுக்கான விற்பனையை துவங்கி வைத்தார்,சிவகங்கை மற்றும் காரைக்குடியில் செயல்பட்டு வரும் விற்பனை நிலையங்களில் இந்த ஆண்டிற்கான விற்பனை இலக்காக 93லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது,இந்நிகழ்வில் கோஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் செந்தில் வேல் மேலாளர் முல்லைக்கொடிசெய்திமக்கள்தொடர்பு அலுவலர்ராஜாசெல்வம்ஆகியோர் கலந்து கொண்டனர்...

# தமிழக வெற்றிக் கழக மாநாடு: வேட்டிசட்டைகள் தயாரிக்க திருப்பூர், ஈரோட்டில் குவியும் ஆர்டர்கள்





திருப்பூர், செப். 29

தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய் அடுத்த மாதம் (அக்டோபர்)27ந்தேதி விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் கட்சியின் முதல் மாநில மாநாட்டை நடத்த உள்ளார். மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் மாநாட்டில் பங்கேற்க வரும் முக்கிய நிர்வாகிகள் வெள்ளை வேட்டி, சட்டை அணிந்து வர வேண்டும் என நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மாவட்ட நிர்வாகிகளிடம் வலியுறுத்தி உள்ளார்.

இதையடுத்து மாநிலம் முழுவதும் உள்ள நிர்வாகிகள் மாநாட்டிற்கு அணிந்து செல்லும் வகையில் வேட்டி, சட்டைகள் தயாரிக்க திருப்பூர், ஈரோடு குமார பாளையம் பகுதிகளில் உள்ள ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில் ஆர்டர்கள் கொடுக்க தொடங்கி உள்ளனர்.

இது குறித்து திருப்பூரை சேர்ந்த பிரபல வேட்டிசட்டை தயாரிக்கும் நிறுவனத்தை சேர்ந்த உரிமையாளர் ஒருவர் கூறியதாவது:

திருப்பூரில் அனைத்து அரசியல் கட்சியினரும் அணியக்கூடிய வகையில் கட்சி பார்டர்களுடன் கூடிய வேட்டிகள் தயாரித்து கொடுத்து வருகிறோம். தற்போது நடிகர்விஜய்கட்சியின்மாநாட்டையொட்டி திருப்பூர் மாவட்ட தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் மூலம் த.வெ.க. பார்டர் போட்ட வேட்டிகள் தயாரிக்க ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கிறது. ஆர்டர்களின்படி வேட்டிகள் தயாரிக்க உள்ளோம்.

மாநாட்டிற்கு இன்னும் ஒரு மாதம் இருப்பதால் குறிப்பிட்ட நேரத்தில் வேட்டிகளை தயாரித்து கொடுத்து விடுவோம். வரும் நாட்களில் கூடுதலாக ஆர்டர்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

இதேப்போல் மாநாட்டிற்கான சால்வை, தொப்பி, பேட்ஜ் உள்ளிட்டவையும் திருப்பூர், ஈரோடு கு ம ா ர ப ா ளை ய த்தில் தயாரிக்கும் பணி வேகமாக நடைபெற்று வருவதாக திருப்பூர் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.

மேலும் எந்தெந்த வடிவில் தயாரிக்க வேண்டும் என்பதற்காக அதற்கான மாடல்களை ஜவுளி நிறுவனங்களிடம் த.வெ.க. நிர்வாகிகள் கொடுத்துள்ளனர்.

அந்த வடிவமைப்பில் வேட்டி, சட்டை, தொப்பிகள், பேட்ஜ்கள் தயாரிக்கும் பணியை ஜவுளி நிறுவனத்தினர் தொடங்கி உள்ளனர்.

தினகனி



# பொது இடங்களில் குப்பை எரித்தால் ரூ.5,000 அபராதம்: மாநகராட்சி நடவடிக்கை



சென்னை, செப். 29

சென்னை மாநகராட்சி கூட்டம் மேயர் பிரியா தலைமையில் இன்று நடந்தது. இந்த கூட்டத்தில் நகரை தூய்மையாகவும் அழகாகவும் பராமரிக்க பல்வேறு நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி குப்பை மற்றும் கட்டிடக் கழிவுகள் ரோட்டோரங்களிலும், பொது இடங்களிலும் கொட்டுவதை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

பொது இடங்களில் குப்பைகளை எரித்தால் இதுவரை ரூ.1000 அபராதம் வசூலிக்கப்பட்டது. இந்த அபராத தொகை ரூ.5 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மரக்கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் முன்பு ரூ.200 அபராதம் விதிக்கப்பட்டது. இனி ரூ.2000 ஆயிரமாக அபராதம் விதிக்கப்படும்.

வியாபாரிகள் குப்பை தொட்டி அல்லது குப்பை கூடை கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

மெரினா, பெசன்ட் நகர், அண்ணாநகர் போன்ற முக்கியமான இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்தினால் கூட்டம் முடிந்ததும் அந்த பகுதியை தூய்மை படுத்த வேண்டும். தூய்மைபடுத்தாமல்இருந்தால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

மாநகராட்சி பள்ளிகளில் பாதுகாப்புக்காக பாதுகாவலர்களை பள்ளி தலைமை ஆசிரியர்களே நியமித்துக் கொள்ள வேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் உறுப்பினர் கண்ணன் பேசும்போது, பருவமழை நெருங்குவதால் பொதுப் பணித்துறை மற்றும் நீர்வளத் துறை மூலம் தூர்வாரும் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும்.

பல சாலைகள் குண்டும் குழியுமாக கிடக்கிறது. அவற்றை உடனடியாக பேட்ச் வேலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மழைக்காலத்தில் சிரமமாகி விடும். தெருவிளக்குகள் ஆயுள் காலம் 7 ஆண்டுகள் தான். பல இடங்களில் பராமரிப்பு இல்லாமல் கிடக்கிறது என்றார்.

இதற்கு ஆளுங்கட்சி தலைவர் ராமலிங்கம், உறுப்பினர்கள் தங்கள் வார்டு பிரச்சினைகளை மட்டும் குறிப்பிட்டு பேசினால் அதை நிவர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும் என்றார்.

சொத்துவரியை வருடத்துக்கு 6 சதவீதம் தாமாகவே உயர்த்தி கொள்ளும் தீர்மானம் விவாதத்துக்கு வந்தது. இதை மாநகராட்சி கைவிட வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர் சிவராஜ சேகர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் பேசும் போது, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், மாநகராட்சிகளில் இருப்பது போல் மாநகராட்சி நிலைக்குழு தலைவர்கள் பதவியை சுழற்சி முறையில் வழங்க வேண்டும். இதனால் மேலும் சில உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்றார்.

# திண்டுக்கல் அருகே ரெயிலில் இருந்து தவறி விழுந்த வாலிபர் பலி

திண்டுக்கல், செப். 29

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி புதுரை சேர்ந்தவர் அர்ச்சுனன். இவரது மகன் பவனேஷ் (வயது 17). இவர் தனது அம்மா ஞானம், அண்ணன் சுனில் ஆகியோருடன் வசித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 5 நாட்களுக்கு முன்பாக பாண்டிச்சேரி சிவன் கோவிலில் சிற்ப வேலைக்காக சென்றார்.

பின்னர் கன்னியாகுமரி செல்வதற்காக நேற்று இரவு 9:30 மணி அளவில் சென்னையில் இருந்து அனந்தபுரி செல்லும் எக்ஸ்பிரஸ் ரெயிலில் படியில் அமர்ந்து பயணம் செய்து வந்தார். இந்த நிலையில் இன்று அதிகாலை திண்டுக்கல்லை கடந்து மொட்டணம்பட்டி அருகே ரெயில் சென்ற போது எதிர்பாராதமாக நிலை தடுமாறி பவனேஷ் தவறி கீழே விழுந்தார்.

இதில் படுகாயம் அடைந்த பவனேஷ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து திண்டுக்கல் ரெயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் மணிகண்டன், எஸ்.பி தனிப்பிரிவு காவலர் ராஜேஷ் குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து ரெயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேடசந்தூரில் தி.மு.க. ஒன்றிய கவுன்சிலரின் கணவர் வெட்டி படுகொலை: உறவினர்கள் போராட்டம்




வேடசந்தூர், செப். 29

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள குன்னம்பட்டியைச் சேர்ந்தவர் மாசி (வயது 40). இவர் வேடசந்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொருளாளராக இருந்தார். மேலும் ரியல் எஸ்டேட் தொழில், ஜே.சி.பி. வாகனங்களை வாங்கி விற்பனை செய்தும் வந்துள்ளார்.

இவர் மனைவி முத்துமாரி (35) நாகம்பட்டி ஒன்றிய கவுன்சிலராக உள்ளார். இவர்களுக்கு குமரன் (8) என்ற மகனும், முருகதனம் (11) என்ற மகளும் உள்ளனர். மாசிக்கு சொந்தமாக பெருமாள்கவுண்டன்பட்டியில் தோட்டம் உள்ளது.

தனது மோட்டார் சைக்கிளில் தோட்டத்துக்கு சென்று அங்கிருந்த தொழிலாளர்களிடம் பேசிக் கொண்டு இருந்தார். பின்னர் மீண்டும் சமத்துவபுரம் அருகே வந்து கொண்டு இருந்தபோது அங்கு மறைந்திருந்த ஒரு கும்பல்அரிவாள்உள்ளிட்ட ஆயுதங்களால் அவரை தாக்க முயன்றனர்.

இதனால் பயந்து போன மாசி அங்கிருந்து தப்பி ஓட முயன்றார். தனது பைக்கை அங்கேயே விட்டு விட்டு ஓட முயன்ற போது விடாமல் துரத்திச் சென்று சரமாரியாக தலை, கழுத்து, கை உள்ளிட்ட பகுதிகளில் கொடூரமாக வெட்டினர்.

இதில் மாசியின் ஒரு கை துண்டாகி கீழே விழுந்தது. ரத்த வெள்ளத்தில் அவர் மயங்கி விழுந்ததைப் பார்த்ததும் அந்த கும்பல் அங்கிருந்து தப்பி ஓடினர்.

ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்த மாசி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதைப் பார்த்ததும் அங்கிருந்த பொதுமக்கள் வேடசந்தூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அவரது உடலை கைப்பற்றி வேடசந்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு மாசியின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏராளமான தி.மு.க.வினர் திரண்டனர். அவர்கள் கொலைக்குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

இரவு 11 மணி வரை அவர்கள் அதே இடத்தில் நகராமல் இருந்ததால் பதட்டமான சூழல் உருவானது. இதனைத் தொடர்ந்து மாசியின் உடலை திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது. ஆனால் அங்கு திரண்டு இருந்தவர்கள் மாசியின் உடலை இங்கேயே பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் எனவும், திண்டுக்கல் எடுத்துச் செல்லக்கூடாது என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றால்தான் அனைத்து வசதிகளும்இருக்கும்என்று கூறி அவர்களை போலீசார் சமாதானம் செய்தனர்.

சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக போலீசாருடன் வாக்குவாதம் செய்து பொதுமக்கள் போராட்டம் நடத்தியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வடமதுரை அருகே கொலை வழக்கில் தொடர்புடைய வாலிபர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றும் 2வது நாளாக தி.மு.க. பிரமுகர் வெட்டி படுகொலை செய்யப்பட்டது பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 16 ஆண்டுகளாக நடந்த வழக்கில் திருப்பம்: பாதிக்கப்பட்டவரே மாறியதால் குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியானார்

சென்னை, செப்.29

பரபரப்பை ஏற்படுத்தும் கொலை வழக்குகளில் கூட சாட்சியங்கள் மாறிவிடுவதால் குற்றவாளிகள் விடுதலை பெறுவதை கேள்விப்பட்டிருப்போம்.

ஆனால் பாதிக்கப்பட்டவரே மாறியதால் குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியாக மாறிய சம்பவம் சென்னையில் அரங்கேறி இருக்கிறது.

16 ஆண்டுகளுக்கு முன்பு... அதாவது கடந்த 2008ம் ஆண்டு சென்னை எம்.கே.பி.நகரைச் சேர்ந்த இப்ராமின் கனி (39) அதே பகுதியை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரது மகன் மதன் கால்பந்து விளையாடியபோது பந்து இப்ராமினின் மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததாக கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட தகராறில் இப்ராமின்மதனைசுற்றிவளைத்து தாக்கி இருக்கி றார்.

அப்போது பாலகிருஷ்ணன் கெஞ்சி தனது மகனை மீட்டு இருக்கிறார். இப்ராமின் கனி தனது பைக்கில் இருந்து பெட்ரோலை பிராந்தி பாட்டிலில் நிரப்பி பாலகிருஷ்ணன் மீது ஊற்றி தீ வைத்ததாகவும் கூறப்படு கிறது. பலத்த தீக்காயம் அடைந்த பாலகிருஷ்ணன் கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டி ருந்தார். அவருக்கு மார்பு, முதுகு மற்றும் கைகளில் பலத்த தீக்காயங்களும் ஏற்பட்டு இருந்தது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த பாலகிருஷ் ணனிடம் இருந்து மரண வாக்கு மூலம் பெற்று கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் இப்ராமின் கனி கைது செய்யப்பட்டார்.

தனது குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டதாக போலீஸ் தரப்பில் தெரி விக்கப்பட்டது. பாலகிருஷ்ணனின் சட்டைப் பையில் இருந்து எரிந்த நிலையில் கைப்பற்றப்பட்ட ரூபாய் நோட்டுகள் ஆதாரமாக இருந்தது.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக மதன் உள்பட 5 பேரை போலீசார் பதிவு செய்து இருந்தனர். வழக்கு விசாரணையின் போது அந்த 5 சாட்சிகளும் பிறள் சாட்சியம் அளித்தனர். இதற்கிடையில் பாதிக்கப் பட்ட பாலகிருஷ்ணனும் குறுக்கு விசாரணையின் போது "அய்யா என் ஆடு திருட்டு போகலை அப்படி கனவு தான் கண்டேன்" என்று சொல்லும் வடிவேலு பட காமெடியை போல் மாறி விட்டார்.

அய்யா, நான்தான் குடி போதையில் இருந்தேன். சட்டைப் பையில் பிராந்தி பாட்டிலை வைத்திருந்தேன். பைக்கின் டயரில் எரிந்த தீப்பொறி பறந்து விழுந்த தில் என் மீதும் தீ பிடித்து கொண்டது என்றார்.

காயம் பட்டிருந்த போது சொன்ன வாக்குமூலத்திற்கும் 16 ஆண்டுகளுக்கு பிறகு சொன்ன வாக்குமூலமும் முற்றிலும் மாறுபட்டு இருந்ததை பார்த்து கோர்ட்டே அதிர்ச்சி அடைந்தது.

பாதிக்கப்பட்டவரே மாறி விட்டதால் குற்றம் சாட்டப் பட்டவரையும் நிராபராதி யாக கருதி விட வேண்டிய சூழல் கோர்ட்டுக்கு ஏற்பட்டது. குற்றம் சாட்டப் பட்டவரே குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்த போதும் அரசு தரப்பு சாட்சியங்கள் மாறியது சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக கோர்ட்டு கூறி உள்ளது.இருப்பினும்வழக்கின் போக்கால் குற்றம் சாட்டப் பட்டவரை கோர்ட்டு விடுவித்தது.

# 3 பேர் கொலை வழக்கில் 4 பேருக்கு தூக்கு: நெல்லை கோர்ட்டில் வழங்கப்பட்ட 3வது தூக்கு தண்டனை



தென்காசி, செப். 29

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள திருவேங்கடத்தை அடுத்த உடப்பன்குளத்தில் கடந்த 2014ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டையொட்டி ஒரு சமுதாயத்தினர், மற்றொரு சமுதாயத்தினரின் தெருவில் பட்டாசு வெடித்தனர்.

இதுதொடர்பாக ஏற்பட்ட பிரச்சனை முன்விரோதமாக மாறி கடந்த 28 52014 அன்று ஒருவரை மற்றொரு சமூகத்தினர் சாதி பெயரை சொல்லி திட்டியதாக புகார் எழுந்தது. இதற்கு பழிவாங்கும் நோக்குடன் அதே ஆண்டு 162014 அன்று உடப்பன் குளம் கீழ தெருவை சேர்ந்த காளிராஜ் (வயது 55), கோவை துடியலூரை சேர்ந்த வேணுகோபால்(42), முருகன்(42) ஆகியோர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் உடப்பன்குளத்தை சேர்ந்த 25 பேரை வன்கொடுமை தடுப்புச்சட்டம் உள்பட 6 பிரிவுகளில் கைது செய்தனர். வழக்கு விசாரணை நெல்லை 2வது கூடுதல் அமர்வு நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் கடந்த 24ந்தேதி நீதிபதி சுரேஷ்குமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்த போது, பொன்னுமணி, குட்டிராஜ், குருசாமி, உலக்கன், தங்கராஜ், வேலுச்சாமி மகன் கண்ணன், பால முருகன், முத்துகிருஷ்ணன், வெளியப்பன் மகன் கண்ணன், வக்கீலான சுரேஷ் உள்ளிட்ட 11 பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு நேற்று இரவு தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதில் பொன்னுமணி, குருசாமி, காளிராஜ், முத்துகிருஷ்ணன் ஆகியோருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. குட்டிராஜ், கண்ணன், மற்றொரு கண்ணன், பாலமுருகன், உலக்கன் ஆகியோருக்கு 5 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. வெளியப்பன் மகன் கண்ணன், வக்கீல் சுரேஷ் ஆகியோருக்கு இரட்டை ஆயுள் விதிக்கப்பட்டது. மேலும் 11 பேருக்கும் அபராதங்களும் விதித்து தீர்ப்பளித்த பின்னர் நீதிபதி சுரேஷ் குமார் பேனாவை உடைத்தார்.

காலையிலேயே தீர்ப்பை வாசித்துவிடுவார் என்று எதிர்பார்த்த நிலையில் 11 குற்றவாளிகளில் 8 பேர் மட்டுமே நீதிபதி முன்பு ஆஜராகினர். இதனால் மாலையில் அறிவிப்பதாக தீர்ப்பை தள்ளி வைத்தார். தீர்ப்பு தங்களுக்கு எதிராக இருக்கும் என்பதை அறிந்த தூக்கு தண்டனை குற்றவாளிகளுக்கு நேற்று காலையில் திடீரென உயர் அழுத்தம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் நெல்லை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

எனினும் நீதிபதி உத்தரவின்பேரில் அவர்களும் மாலையில் கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். இதேபோல் சங்கரன்கோவில் துணை போலீஸ் சூப்பிரண்டு காலையில் கோர்ட்டுக்கு வராத நிலையில், நீதிபதி உத்தரவின் பேரில் அவரும் மாலையில் நேரில் ஆஜராகினார்.

இந்த நிலையில் தான் பரபரப்பான தீர்ப்பை வழங்க அவர் தயாரானார். அப்போது புகார்தாரர் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. அவர்கள் இன்று நல்லபடியாக தீர்ப்பு வரவேண்டும் என்பதற்காக கோவிலுக்கு சென்றுவிட்டனர். எனவே தீர்ப்பை வாசித்துவிடுமாறு அரசு வக்கீல் கந்தசாமி தெரிவித்தார்.

ஆனால்வழக்குதீர்ப்பை அவர்கள் பார்க்கவேண்டும். வீடியோ கால் செய்து பார்க்க செய்யுங்கள். அதன்பின்னர் நெல்லையப்பர் கோவிலில் வந்து சாமி கும்பிட சொல்லுங்கள் என்றார். எனினும் அதற்கான வழிவகை இல்லா காரணத்தினால் தீர்ப்பை வாசிக்க நீதிபதி முடிவு செய்தார்.

அப்போது குற்றவாளிகள் நீதிபதியை நோக்கி இருகரம் கூப்பியபடி, கதறி அழுதனர். எங்களுக்கு இதில் தொடர்பில்லைஎன்றனர். ஆனால் உங்கள் மீதான குற்றங்கள் நிருபிக்கப்பட்டு விட்டது. பேசாமல் இருங்கள் என்று நீதிபதி கூறிவிட்டார். இந்த தீர்ப்பை கேட்டு புகார் தாரரின் உறவினர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தண்டணை பெற்றவர்களின் குடும்பத்தினர் கதறி துடித்தனர். தொடர்ந்து கண்ணீருடன் குற்றவாளிகள் இரவோடு இரவாக பாளை மத்தியச்சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டனர்.

நெல்லை கோர்ட்டில் ஏற்கனவே 2 வழக்குகளில் தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ளது 3வது தூக்கு தண்டனையாகும். கடந்த2016ம் ஆண்டு நெல்லையில் கல்பனா என்ற கர்ப்பிணி பெண் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு 2வது கூடுதல்அமர்வுநிதிமன்றத்தில் நடந்தது. வழக்கை விசாரித்த நிதிபதி அப்துல் காதர் குற்றம் சாட்டப்பட்ட தம்பதிகளான சங்கரநாராயணன், செல்லம்மாளுக்கு தூக்கு தண்டனை வழங்கினார். இதேபோல கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் 8ந் தேதி நெல்லை பேட்டையை சேர்ந்த 5 வயது சிறுவன் கொலை செய்யப்பட்டான். இந்த வழக்கு முதலாவது கூடுதல் அமர்வு நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட ஆறுமுகம் என்பவருக்கு தூக்கு தண்டனை விதித்தார். தற்போது 3வது முறையாக தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் 150 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு விவரங்கள் அடங்கிய ஆவணத்தை குற்றவாளிகள் 11 பேருக்கும் கோர்ட்டு ஊழியர்கள் வழங்கினர்.

# நாய்கள் கடித்து இறந்த ஆடுகளை பாடை கட்டி திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு தூக்கி வந்த விவசாயிகள்



திருப்பூர், செப். 29

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சுற்றுவட்டார பகுதிகளில் தெருநாய்களால் ஆடுகள் தொடர்ந்து வேட்டையாட்டப்பட்டு வருகிறது. ஆடுகளை கடித்து கொன்று வருவதால், கால்நடை விவசாயிகள் கடும் பொருளாதார இழப்பை சந்தித்து வருகின்றனர்.

வீராணம்பாளையம் செந்தில்குமார் என்பவருக்கு தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த ஆடுகளை நாய்கள் கடித்ததில், ரூ. 1 லட்சம் மதிப்பிலான 7 ஆடுகள் உயிரிழந்தன.

இந்நிலையில்காங்கயம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்கள் நேற்று காத்திருப்பு போராட்டத்தை துவங்கினர். தொடர்ந்து காங்கயம் போலீசார் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடையவே, இன்று ஆடுகளை பாடை கட்டி திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு எடுத்து வந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தெரிவித்தனர்.

இதையடுத்து இன்று காலை காங்கயத்தில் இருந்து திருப்பூர் நோக்கி இறந்த ஆடுகளை பாடை கட்டி தூக்கி வந்தனர்.

திருப்பூர் மாநகர எல்லையான நல்லூர் சிக்னல் அருகே வரும் போது அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் விவசாயிகள் மற்றும் போலீசார் இடையே லேசான தள்ளு முள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து விவசாயிகள், பாடை கட்டி தூக்கி வந்த இறந்த ஆடுகளை சாலையில் போட்டு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். இதனிடையே இன்று திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் இப்பிரச்சனை எதிரொலித்தது.

# வாரவிடுமுறை தினத்தை முன்னிட்டு கும்பகோணம் கோட்டம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கம்



தஞ்சாவூர், செப். 29

கும்பகோணம் கோட்ட அரசு போக்குவரத்து கழக நிர்வாகஇயக்குனர்பொன்முடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டம் சார்பில் நாளை, நாளை மறுநாள் (சனி, ஞாயிறு) வார விடுமுறையையொட்டி திருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம் ஆகிய ஊர்களில் இருந்து சென்னைக்கும், சென்னையில் இருந்துதிருச்சி, கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருவாரூர், மயிலாடுதுறை, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, காரைக்குடி, ராமநாதபுரம் ஆகிய ஊர்களுக்கும் 295 பஸ்கள் இயக்கப்படுகிறது.

திருச்சியில் இருந்து கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, காரைக்குடி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி ஆகிய இடங்களுக்கும், கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்து திருச்சிக்கும் 175 பஸ்கள் கூடுதலாக இயக்கப்படும்.

அதேபோன்று, விடுமுறைக்கு பின் பயணிகள் மீண்டும் அவரவர் ஊர்களுக்கு திரும்ப செல்ல 29, 30 ஆகிய தேதிகளில் (ஞாயிறு, திங்கட்கிழமை) சென்னை தடத்தில் 200 சிறப்பு பஸ்களும், பிற தடங்களில் 150 சிறப்பு பஸ்களும் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனி, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை காரணமாக பயணிகள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல வசதியாக பயணிகள் முன்னதாகவே முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முன்பதிவு செய்யும் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதலாக பஸ்கள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை ரெயில் வந்தபோது தண்டவாளத்தில் கல் வைத்த மர்ம நபர்கள் யார்? போலீசார் விசாரணை

நெல்லை: செப். 29

செங்கோட்டையில் இருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் மாலை 6.25 மணிக்கு பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் புறப்பட்டு சென்று கொண்டிருந்தது.

பாம்புச்சந்தை ரெயில் நிலையத்திற்கும், சங்கரன்கோவில் ரெயில் நிலையத்திற்கும் இடையே சங்கனாப்பேரி பகுதியில் மாலை 6.50 மணிக்கு ரெயில் வந்தபோது, தண்டவாளத்தின் நடுவில் சுமார் 10 கிலோ எடை கொண்ட பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது.

உடனடியாக சாமர்த்தியமாக என்ஜின் டிரைவர் ரெயிலை நிறுத்தியதால் பெரும் அசம்பாவிதம்



தவிர்க்கப்பட்டது. பின்னர் அந்த கல்லை அகற்றி விட்டு சுமார் 20 நிமிடம் தாமதமாக ரெயில் இரவு 7.10 மணிக்கு புறப்பட்டு சென்றது. இதுகுறித்து ரெயில்வே உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, நெல்லை ரெயில்வே துணை போலீஸ் சூப்பிரண்டு இளங்கோவன் மேற்பார்வையில் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்த வந்தனர்.

தொடர்ந்து தண்டவாளங்களை ஆய்வு செய்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயிலை கவிழ்க்க சதி நடந்துள்ளதா, என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். பாறாங்கல்லை வைத்த மர்ம நபர்கள் யார் என்பது குறித்து இன்று 2வது நாளாக ரெயில்வே போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம்நடந்தநாளன்று அந்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஏதேனும் வாகனங்கள் வந்துள்ளதா? அங்கு திட்டமிட்டு ஏதேனும் கும்பல் வந்ததா? அல்லது குடிபோதையில் யாரேனும் இந்த செயலை செய்தார்களா? என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

# முதியவர் தவறவிட்ட ரூ.50 ஆயிரம், ஆவணங்களை மீட்டு நேர்மையுடன் ஒப்படைத்த வாலிபர்

கரூர், செப்.29

கரூர், வடக்கு பிரதட்சணம் பகுதியைச் சேர்ந்த திருவேங்கடம் (வயது 66). பத்திர எழுத்தரான இவர் வங்கியில் 50 ஆயிரம் ரூபாய் பணத்தை டெபாசிட் செய்வதற்காக, கரூர் பேருந்து நிலையத்தை கடந்து தின்னப்பா தியேட்டர் வழியாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, வழியில் அவருடைய பணப்பையுடன் கூடிய அசல் ஆவணங்களை தவறி விட்டு விட்டார். இதனை அவ்வழியாகவந்தகரூரைசேர்ந்த



வாலிபர் லியாகத் உசேன் அன்சாரி என்பவர் எடுத்து வந்து கரூர் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதையடுத்து திருவேங்கடத்தை போலீசார் தொடர்பு கொண்டனர். இதையடுத்து அவரது ரூ.50 ஆயிரம் ரொக்கம் மற்றும் ஆவணங்களை லியாகத் உசேன் அன்சாரி முன்னிலையில் இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் மற்றும் சப்இன்ஸ்பெக்டர் நாகராஜ் ஆகியோர் ஒப்படைத்தனர்.

தவறவிட்ட பணத்தை அரை மணி நேரத்திற்குள் திரும்ப பெற்றுக்கொண்ட முதியவர் திருவேங்கடம் காவல்துறை மற்றும் பணத்தை எடுத்து வந்து ஒப்படைத்த லியாகத் உசேன் அன்சாரி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும் சாலையில் கிடைத்த பணம், ஆவணங்களை நேர்மையுடன் ஒப்படைத்த லியாகத் உசேன் அன்சாரியை போலீசார் மற்றும் பொது மக்கள் வெகுவாக பாராட்டினர்.

# வாட்ஸ்அப் அழைப்பில் பேசி காதலியை ஆபாச வீடியோ எடுத்த வாலிபர்

கோவை, செப். 29

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் தனுஷ்வெங்கட் (வயது 20) என்பவர் வேலை பார்த்து வந்தார்.

அதே நிறுவனத்தில் கோவையைச் சேர்ந்த 19 வயது இளம்பெண்ணும் பணியாற்றினார். ஒரே நிறுவனத்தில் பணியாற்றுவதால் 2 பேரும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தனுஷ்வெங்கட் அந்த பெண்ணை காதலிப்பதாக கூறினார். முதலில் அந்த பெண், காதலை ஏற்க மறுத்தார். ஆனால் தனுஷ்வெங்கட், விடாமல் காதல் வலை வீசினார்.

தனுஷ்வெங்கட்டின் ஆசைவார்த்தைகளில் மயங்கி அந்த பெண்ணும் அவரை காதலிக்கத் தொடங்கினார். நேரில் சந்தித்து பேசுவது மட்டுமல்லாமல் வீடுகளுக்கு திரும்பியபிறகு அவர்கள் செல்போனிலும் பேசி காதலை வளர்த்து வந்தனர்.

சம்பவத்தன்று இரவு தனுஷ்வெங்கட், அந்த பெண்ணை வாட்ஸ்அப் அழைப்பில் தொடர்பு கொண்டுள்ளார். அப்போது அவர் அந்த பெண்ணை ஆடையின்றி பார்க்க விரும்புவதாக கூறி உள்ளார். அதற்கு அந்த பெண் மறுப்பு தெரிவித்துள்ளார். நான் தானே உன்னை திருமணம் செய்து கொள்ளப் போகிறேன், பிறகு ஏன் தயங்குகிறாய் என கூறி கெஞ்சி உள்ளார்.

அந்தபெண்ணும்தனுஷ்வெங்கட்டை நம்பி, அவர் கூறியதுபோல வாட்ஸ்அப் அழைப்பில் ஆபாசமாகநின்றுள்ளார்.அதனை அந்த பெண்ணுக்கு தெரியாமலேயே தனுஷ்வெங்கட் தனது செல்போனில் பதிவு செய்து கொண்டார். அதன்பின் காதலியின் ஆபாசவீடியோவை அடிக்கடி பார்த்து ரசித்துள்ளார்.

அவர் ரசித்தது மட்டுமல்லாமல் தனது நண்பர் ஒருவருக்கும் காதலியின் ஆபாச வீடியோவை அனுப்பி வைத்துள்ளார். அந்த வீடியோவை பார்த்த நண்பர் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளார். காரணம் அவர் அந்த இளம்பெண்ணின் உறவினர் ஆவார். உடனே அவர் ஆபாச வீடியோ குறித்து பெண்ணின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் பெண்ணை கண்டித்தனர். அப்போது தன்னை ஏமாற்றி தனுஷ்வெங்கட் ஆபாச படம் எடுத்து விட்டதாக கூறி கண்ணீர் விட்டு கதறி அழுதார்.

இதையடுத்து பெண்ணின் பெற்றோர் தங்கள் மகளுக்கு ஏற்பட்ட துயர சம்பவம் குறித்து கோவை மேற்கு மகளிர் போலீஸ்நிலையத்தில் புகார் செய்தனர். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் பழனியம்மாள், சப்இன்ஸ்பெக்டர் தங்கம் ஆகியோர் வழக்குப்பதிவு செய்து தனுஷ்வெங்கட்டை கைது செய்தனர்.

போலீஸ் விசாரணையில் தனுஷ்வெங்கட்டின் நடவடிக்கைகளால் பிடிக்காமல் அவர் காதலித்த பெண் அவரை விலகிச் சென்றுள்ளார். மீண்டும் அந்த பெண், தன்னுடன் பழக வேண்டும் என்று எதிர்பார்த்த தனுஷ்வெங்கட், பெண்ணை மிரட்டும் வகையில் அவரது உறவினரான தனது நண்பருக்கு ஆபாச வீடியோவை அனுப்பி வைத்துள்ளார். தற்போது போலீசில் சிக்கிக் கொண்டார். இதுபற்றி போலீசார் கூறும்போது தற்போது சைபர் கிரைம் குற்றங்கள் பெருகி விட்டன. எனவே பெண்கள் தங்கள் புகைப்படங்களை பிறருக்கு அனுப்பக்கூடாது. வாட்ஸ்அப்பில் ஸ்டேட்டஸ், புரொபைல் வைப்பதையும் தவிர்க்க வேண்டும் என்றனர்.

# குரூப்2, 2ஏ முதல்நிலை தேர்வு முடிவு டிசம்பர் மாதம் வெளியீடு




சென்னை, செப். 29

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.,) தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை போட்டித் தேர்வுகள் வாயிலாக நிரப்பி வருகிறது. அந்தவகையில், துணை வணிகவரி அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், சார்பதிவாளர் நிலை 2, தனிப்பிரிவு உதவியாளர், உதவிப்பிரிவு அலுவலர், வனவர் ஆகிய குரூப்2 பணியிடங்களில் 507 காலிப்பணியிடங்கள் உள்ளன.

அதேபோல், உதவியாளர், தணிக்கை ஆய்வாளர், முழுநேர விடுதி காப்பாளர், முதுநிலை ஆய்வாளர், நேர்முக எழுத்தர், கணக்கர் ஆகிய குரூப்2ஏ பணியிடங்களில் ஆயிரத்து 820 பணியிடங்களும் காலியாக உள்ளன. இதற்கான முதல்நிலை போட்டித்தேர்வு, தமிழகம் முழுவதும் கடந்த 14ந்தேதி நடைபெற்றது. தேர்வுக்கான, விடைக்குறிப்புகள் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், குரூப்2 மற்றும் 2ஏ பணியிடங்களுக்கான முதல் நிலை தேர்வு முடிவுகள் வருகிற டிசம்பர் மாதம் வெளியிடப்படும் என்று டி.என்.பி.எஸ்.சி அறிவித்துள்ளது. அதேபோல், குரூப்2 மற்றும் 2ஏ முதன்மை தேர்வானது அடுத்த ஆண்டு (2025) பிப்ரவரி மாதம் நடைபெறும் என்றும் டி.என்.பி.எஸ்.சி. அறிவித்துள்ளது.

# பணத்துடன் பிடிபட்ட கண்டெய்னர் லாரிக்குள் இருந்த வட இந்திய கொள்ளையன் சுட்டுக்கொலை




நாமக்கல், செப். 29

கேரள மாநிலம் திருச்சூரில் மாப்ராணம், கொளழி, சொரனூர் ரோடு பகுதிகளில் பாரத ஸ்டேட் வங்கிக்கு சொந்தமான ஏ.டி.எம். எந்திரங்கள் உள்ளன. இந்த ஏ.டி.எம்.மையங்களில் நேற்று இரவு யாரோ புகுந்து பணத்தை கொள்ளையடித்துள்ளனர். இன்று அதிகாலை அந்த வழியே சென்றவர்கள், ஏ.டி.எம். எந்திரங்கள் சேதப்படுத்தப்பட்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இதுபற்றி போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். வங்கி அதிகாரிகளும் ஏ.டி.எம். மையங்களுக்கு வந்தனர். அவர்கள் ஏ.டி.எம். எந்திரங்களில் இருந்த ரூ.65 லட்சம் கொள்ளை போயிருப்பதாக தெரிவித்தனர்.

ஏ.டி.எம். மையங்களில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பெயிண்ட் அடித்து பதிவுகள் தடுக்கப்பட்டிருப்பது போலீசாரின் விசாரணையில் தெரிய வந்தது. இதனைத்தொடர்ந்து போலீசார் அந்த பகுதிகளில் உள்ள மற்ற கண்காணிப்பு காமிராக்களின் பதிவுகளை கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்தனர்.

அப்போது இன்று அதிகாலை 3 மணி முதல் 4 மணிக்குள் வெள்ளைநிற காரில் முகமூடி அணிந்த 4 பேர் வந்து இறங்குவதும்,

அவர்கள் கையில் கியாஸ் கட்டர் எடுத்து வந்திருப்பதும் தெரியவந்தது. 4 பேரும் ஏ.டி.எம். மையத்திற்குள் நுழைவதும் அங்குள்ள கண்காணிப்பு காமிரா மீது பெயிண்ட் அடிக்கின்றனர். பின்னர்தான் அவர்கள் கியாஸ் கட்டர் கொண்டு ஏ.டி.எம். எந்திரத்தை வெட்டி பணம் எடுத்துள்ளனர்.

# விருதுநகர் அருகே மினி பஸ் கவிழ்ந்து விபத்து பள்ளி, கல்லூரி மாணவர்கள் 4 பேர் உயிரிழப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், செப். 29

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மம்சாபுரம் கிராமம். ஆரம்பம், நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள் இருந்தபோதிலும், கல்லூரி படிப்பிற்கு மாணவ, மாணவிகள் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் நகருக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

அதிலும் குறிப்பாக குறைந்த அளவிலான அரசு பேருந்துகள் மம்சாபுரத்திற்கு இயக்கப்பட்ட போதிலும் ஷேர் ஆட்டோக்கள், மினி பஸ்கள் இயக்கப்படுவதால் அதனைநம்பியேமாணவ, மாணவிகள், பொதுமக்கள், வியாபாரிகள் இருந்து வருகிறார்கள்.

இந்தநிலையில் மம்சாபுரத்தில் இருந்து இன்று காலை பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்லும் ஆண், பெண் தொழிலாளர்கள் ஆகியோரை ஏற்றிக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கி மினி பஸ் ஒன்று வந்து கொண்டிருந்தது.



மம்சாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் வந்தபோது திடீரென்று அந்த மினி பஸ் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் இருபுறமும் தாறுமாறாக ஓடியது. பஸ்சில் பயணம் செய்தவர்கள் அச்சத்தில் கூச்சல் போட்டார்கள். டிரைவர் பஸ்சை நிறுத்த போராடியும் முடியாமல் போனது. கடைசியில் அந்த பஸ் சாலையோரத்தில் இருந்த பள்ளத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது.

விபத்து நடந்ததும், பஸ்சில் பயணம் செய்தவர்கள் அலறி அடித்துக்கொண்டு உயிரை கையில் பிடித்துக்கொண்டு பஸ்சை விட்டு வெளியே வர முயற்சி செய்தனர். பஸ் கவிழ்ந்த தகவல் அறிந்த அக்கம்பக்கத்தில் இருந்தோர் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததோடு, விபத்து பகுதிக்கு திரண்டு வந்தனர்.

உடனடியாக மம்சாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, ராஜபாளையம், வத்திராயிருப்பு ஆகிய ஊர்களில் இருந்தும் 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மின்னல் வேகத்தில் சம்பவ இடத்திற்கு வந்தன. அக்கம்பக்கத்தினர் பஸ்சுக்குள் பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடியவர்களை மீட்டு வெளியே கொண்டு வந்தனர்.

இருந்தபோதிலும் இந்த கோர விபத்தில் கல்லூரி மாணவர்களான சதீஷ்குமார், வாசுராஜ், ஸ்ரீதர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் குரு ஞானசம்பந்தர் இந்து மேல்நிலைப்பள்ளி பிளஸ் 2 மாணவர் நிதிஷ்குமார் ஆகிய 4 பேரும் இடிபாடுகளுக்குள் சிக்கி உடல் நசுங்கி பலியானார்கள். 10க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்தனர்.

மேலும் காயமடைந்த 30க்கும் மேற்பட்டோர் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அதில் உயிருக்கு ஆபத்தான நிலையிலர் 20க்கும் மேற்பட்டோர்மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்து குறித்து அறிந்த மம்சாபுரம் மற்றும் சுற்றுப் பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள் கண்ணீருடன் கதறியவாறு ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டனர்.

மேலும் அந்த பகுதியைச்சேர்ந்த கிராம மக்கள் கூறுகையில், மினி பஸ் அதிவேகத்தில் சென்று அடிக்கடி விபத்தில் சிக்கி வருவதாகவும், பள்ளி, கல்லூரி மாணவர்கள் நலன் கருதி காலை நேரங்களில் மம்சாபுரம் பகுதிக்கு கூடுதல் பஸ்களை இயக்க வேண்டும் என்றும் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜா, இன்ஸ்பெக்டர் முத்துக்குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கும், அரசு மருத்துவமனைக்கும் நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே விபத்துக்கு காரணமானவர்களை கைது செய்ய வலியுறுத்தி மம்சாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முன்பாக சுமார் 500க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# ரூ.110 கோடி போதைப் பொருள் கடத்தலின் பின்னணியில் இருப்பவர்களை பிடிக்க வேட்டை

சென்னை, செப். 29

சென்னை துறைமுகத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து அதிகாரிகள் அங்கு விரைந்து சென்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.





அப்போது ஒரு கண்டெய்னரில் 'குவார்ட்ஸ்' பவுடர் பாக்கெட்டுகளுடன் 112 கிலோ சூடோபெட்ரின் போதைப் பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.110 கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தபோதைப்பொருட்களை சரக்கு கப்பல் மூலமாக ஆஸ்திரேலியாவுக்கு கடத்த இருந்ததை கண்டுபிடித்து அனைத்தையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக துறைமுக ஏஜெண்டுகள் இருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான ஏஜெண்டுகளின் பெயர் அபுதாகிர், அகமது பாஷா என்பது தெரிய வந்தது. இருவரிடமும் வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்தபோதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் யார்யார்? என்பது பற்றிய விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது. துறைமுக ஏஜெண்டுகள் இருவர் மூலமாக ஆஸ்திரேலியாவுக்கு போதைப் பொருட்கள் கடத்துவதற்காக துறைமுகத்துக்கு போதைப் பொருட்களை அனுப்பிவைத்தவர்கள் யார்? என்பது பற்றிய விசாரணையை தீவிரப்படுத்தி உள்ள அதிகாரிகள் இதில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய அதிரடி வேட்டை நடத்தப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் கண்டெய்னரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த போதைப் பொருட்கள் துறைமுக அதிகாரிகள் யாரும் உடந்தையாக இருந்தார்களா? என்பது பற்றியும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதில் அதிகாரிகளுக்குதொடர்புஇருந்தால் அவர்களை கைது செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# விழுப்புரம் மாவட்ட தேமுதிக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்



விழுப்புரம், செப். 29

விழுப்புரம் மாவட்டம் வானூர் ஒன்றியம் திருச்சிற்றம்பலம் கூட்டுரோடு அருகே கேப்டன் நல்லாசியுடன் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆணைக்கிணங்க, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.வானூர் ஒன்றிய அவைத்தலைவர் இராதாகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். தேர்தல் பணிக்குழு செயலாளர் மாதவன் சிறப்புரை ஆற்றினார். மதியழகன்,தணிகைவேல், பிரகாஷ், முருகன், ஜாபர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.உடன் மாவட்ட, ஒன்றிய,கிளை நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கண்மாயில் விழுந்து பெண் பலி



மதுரை, செப். 29

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா வெள்ளரிபட்டியில் செல்வி முருகேஸ்வரி இன்று 28 9 20024 காலை 10 மணி அளவில் குளிக்க சென்றபோது எதிர்பாராத விதமாக அருகில் உள்ள கண்மாயில் எதிர்பாராத விதமாக விழுந்து உயிரிழந்தார் இது சம்பந்தமாக தீயணைப்பு துறையினர் உடலை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் இவர் அருகில் உள்ள கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரிய வருகிறது இவர் மரணம் பற்றி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# இந்து மதத்தை அவமரியாதை செய்வதை யாரும் பொறுக்க மாட்டார்கள்: நடிகை குஷ்பு



சென்னை, செப். 29

நடிகை குஷ்பு திருப்பதி பெருமாள் பக்தை. அவ்வப்போது அங்கு சென்று வழிபடுவார். தற்போது வெளியாகி உள்ள திருப்பதி லட்டு சர்ச்சை அவரை வருத்தம் அடைய வைத்துள்ளது.

இது தொடர்பாக அவர் தனது வலைத்தள பதிவில் குறிப்பிட்டு இருப்பதாவது:

திருப்பதி லட்டு பற்றி ஏராளமாக பேசப்படுகிறது. இதில் நான் கவனித்ததெல்லாம் எப்போதெல்லாம் இந்து மதம் குறிவைக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் அமைதியாக நடந்து கொள்ளவும் மனோபாவத்தோடு இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறோம். அது ஏன்?

ஒருகுறிப்பிட்டமதத்தை அதாவது இந்து மதத்தை துஷ்பிரயோகம் செய்பவர்களிடம்நான்கேட்கிறேன்.

இஸ்லாம் அல்லது கிறிஸ்தவம் பற்றி அதே மொழியில் அதே வார்த்தையில் பேச உங்களுக்கு தைரியம் இருக்கிறதா? வேறு எந்த மதத்தை பற்றி தவறாக பேச நினைத்தாலே உங்கள் முதுகெலும்பு நடுங்குகிறது.

மதச்சார்பின்மை என்பது அனைத்து மதங்களையும் மதித்தல். பாரபட்சம் காட்டுவது அல்ல. நான் இஸ்லாத்தை பின்பற்றும் ஒரு பிறவி முஸ்லீம். ஆனால் நான் கடவுள் மீது பக்தியும், நம்பிக்கையும் கொண்ட இந்து குடும்பத்தில் திருமணம் செய்து கொண்ட ஒரு இந்து. எனக்கு எல்லா மதங்களும் ஒன்றுதான்.

இந்து மதத்தை அவமதிக்கவோ, சாதாரணமாகவோ எடுத்து கொள்ளவோ கூடாது. எந்த விதமான அவமரியாதையையும் பொறுத்து கொள்ள முடியாது.

கலப்படம் செய்யப்பட்ட திருப்பதி லட்டு உலகெங்கிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளையும், நம்பிக்கையையும் புண்படுத்துகிறது.

இதற்கு பொறுப்பானவர் யாராக இருந்தாலும் அதற்கான விலையை கொடுத்தே தீர வேண்டும். எல்லாவற்றையும் வெங்கடேச பெருமான் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டு உள்ளார்.

# தென்காசி அரசுப்பள்ளி மாணவிகளின் சுகாதார நலன் காக்கும் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் சார்பில் 1000 கழிவறைகளை சீர்படுத்தும் திட்டம் தொடக்கம்



தென்காசி, செப். 29

தென்காசி அரசுப் பள்ளி மாணவிகளின் சுகாதார நலன் காக்கும் வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேசன் சார்பில் 1000 கழிவறைகளை சீர்படுத்தும் திட்டம் தொடக்கம்.

முறையான சுகாதார வசதிகள் இல்லாததால் 60 சதவீதம் மாணவிகளின் கல்வி பாதிக்கப்படுகிறது, என்று வாய்ஸ் ஆப் தென்காசி நிறுவனர் ஆனந்தன் அய்யாச்சாமி வேதனை தெரிவித்தார். ஆகவே 1000 அரசுப் பள்ளிகளில் இருக்கும் கழிவறையை மேம்படுத்தும் பணியை தொடங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டம் பண்பொழியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முறையாக பராமரிப்பின்றி இருந்த கழிவறையை வாய்ஸ் ஆப் தென்காசி அறக்கட்டளைஸ்பிரிண்ட்6 நிறுவனத்துடன் இணைந்து சீர் செய்யும் பணியை சமீபத்தில் தொடங்கியது. பயன்படுத்த இயலாத நிலையில் இருந்த கழிவறைகள் வாய்ஸ் ஆப் தென்காசியின் முயற்சியால் சீர்படுத்தப்பட்டு, அதன் திறப்பு விழா நடந்தது.

விழாவுக்கு வாய்ஸ் ஆப் தென்காசி அறக்கட்டளை நிறுவனர் ஆனந்தன் அய்யாச்சாமி தலைமை தாங்கி பேசினார். அவர் பேசுகையில், முறையான சுகாதார வசதிகள் இல்லாததால் 60% பெண் குழந்தைகள் மாதவிடாய் காரணமான பள்ளியைத் தவறவிடுகின்றனர் என்று யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. இது மிகவும் வேதனைக்குரியது.

உலக சுகாதார நிறுவன ஆய்வில், 40% மாணவர்கள் பள்ளி கழிவறைகளை பயன்படுத்த பயப்படுவதால் ஒரு நாளைக்கு ஒரு லிட்டருக்கும் குறைவாக குடிநீர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு தண்ணீர் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். எனவேதான் நாங்கள் கழிவறைகளை சீர்படுத்தும் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளோம்.

அதேப்போல, கடந்த 2019ம் ஆண்டு குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் அரசுப்பள்ளிகள் குறித்த ஒரு ஆய்வு முடிவை அறிவித்தது. அதில் 80 சதவீதம் அரசுப் பள்ளி கழிவறைகளில் அடிப்படை வசதிகள் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தென்காசி மாவட்ட அரசுப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளைச் சீர்படுத்தும் முடிவு செய்துள்ளோம். முதல்கட்டமாக 1000 கழிவறைகள் சீரமைக்கப்பட உள்ளது. அதற்கான தொடக்கம் தான் இன்றைய விழா. மாணவர்கள் எல்லோரும் நன்றாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும், என்றார்.

விழாவில், சிறப்பு அழைப்பாளர்களாக கல்வியாளர் மருதையா, வழக்கறிஞர் மைதின் பாரூக், வட்டார கல்வி அலுவலர் இளமுருகன், தலைமை ஆசிரியை நஜ்முன்னிசா, ஸ்பிரிண்ட்6 நிறுவனர் காளி சூர்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கழிவறை சீர்படுத்தும் முன்னெடுப்பில் அனைவரும் பங்கெடுக்கலாம். நீங்கள் உதவுதால் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம். மேலுன் மாணவர்களின் வருகை மற்றும் செயல்திறனை அதிகரிக்கச் செய்யவும், பெண் குழந்தைகளின் பள்ளி இடைநிற்றல் விகிதத்தை குறைக்கவும் இந்த முன்னெடுப்பு உதவும் என்று வாய்ஸ் ஆப் தென்காசி அறக்கட்டளை கேட்டுக் கொண்டுள்ளது..

# அ.தி.மு.க. ஒன்றுபடாமல் வெற்றி வாய்ப்பு இல்லை ஓ.பி.எஸ்



சென்னை, செப். 29

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனாரின் 120வது பிறந்தநாளையொட்டி சென்னை எழும்பூரில் உள்ள அவரது சிலைக்கு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்னர் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பத்திரிகை உலகில் அடித்தட்டு மக்கள் வரை சுலபமாக தமிழில் படிக்க ஆதித்தனார் ஆற்றிய பணி இன்றும் கிராமப்புறங்களில் பாமர மக்களால் பாராட்டப்படுகிறது. அவர் புகழ் உலகம் உள்ள வரை நிலைத்து நிற்கும். அ.தி.மு.க.வில் பிரிந்து இருக்கக்கூடிய சக்திகள் அனைவரும் தொண்டர்கள்தான்.


தொண்டர்கள் ஒருங்கிணையாமல் வெற்றி பெற முடியாது. நடைபெற்று முடிந்த பாராளுமன்ற பொது தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை கேட்டு பெற்று வாங்கி ஏழு இடங்களில் டெபாசிட் பறிபோய் இருக்கிறது. 13 இடங்களில் மூன்றாவது இடத்தில் வந்திருக்கிறது. பிற பாராளுமன்றத் தொகுதிகளிலும் பெரும் பின்னடைவை சந்தித்திருக்கிறது.

ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற முடியாமல் இருக்கக்கூடியதற்கு தொண்டர்களை பிரித்து வைத்திருப்பது தான் காரணமாகும். தொண்டர்கள் ஒன்று சேர்ந்து அ.தி.மு.க. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா கட்டி காப்பாற்றிய இந்த இயக்கத்தை மீண்டும் வலுவாக உயர்த்தி பிடிக்க வேண்டும். ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட்ட போது என்னை எதிர்த்து போட்டியிடுவதற்கு ஆறு பன்னீர் செல்வம் என்னுடன் நின்றார்கள்.

இரட்டை இலையை டெபாசிட் இழக்க செய்து தமிழக அரசியலில் அருவருக்கத்தக்க அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சுயேச்சையாக நின்ற நான் 33 சதவீத வாக்குகள் பெற்று இருக்கிறேன்.

தொண்டர்களும் பொது மக்களும் எங்கள் பக்கத்தில் தான் இருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.



கரூர் மாவட்டம் குளித்தலை பகுதியில் அரசன் கண் மருத்துவமனை மூலம் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது இதில் சில்ட்ரன் சாரிடபிள் ட்ரஸ்ட் சார்பாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குணசேகர் வரவேற்புரை வழங்கினார்.இதில் 80 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.15 நபர்களுக்கு இலவச கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது

# அமரன் படத்தில் சாய் பல்லவி Vibes.. புது டீசர் வைரல்




இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து முடித்துள்ள திரைப்படம் அமரன். உலக நாயகன் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம் இண்டர்நேஷனல் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்துள்ளார். ஜி.வி.பிரகாஷ்குமார் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்த திரைப்படத்தில்"முகுந்தன்" என்கின்ற கதாபாத்திரத்தில் நடிகர் சிவகார்த்திகேயன், ஒரு ராணுவ வீரராக நடித்திருக்கிறார். ஜம்மு காஷ்மீரில் உள்ள இந்திய ராணுவ தளத்தின் உயர் அதிகாரியாக அவர் இந்த திரைப்படத்தில் நடித்திருக்கிறார்.

அமரன் திரைப்படம் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் டப்பிங் பணிகளை சிவகார்த்திகேயன் முடித்துள்ளார். படத்தின் முதல் பாடலான ஹே மின்னலே இன்னும் சில நாட்களில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. தற்பொழுது சாய் பல்லவி கதாபாத்திரத்தின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. சாய் பல்லவி படத்தில் இந்து ரெபேக்கா வர்கீஸ் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மிகவும் துறுதுறுவென சிவகார்த்திகேயன் மற்றும் சாய்பல்லவியின் ஜோடி பார்க்கவே மிகவும் கியூட்டாக உள்ளது. மேஜர் முகுந்தனின் மனைவியும் இந்த காட்சியில் இடம்பெற்றுள்ளார். சாய் பல்லவியின் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது. அமரன் படத்தை குறித்த எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே உள்ளது.

# கான்பூர் டெஸ்ட்: வங்கதேச ரசிகர் மீது தாக்குதல்.. மைதானத்தில் பரபரப்பு வீடியோ



இந்தியா வங்கதேச அணிகளுக்கு இடையேயான 2வது டெஸ்ட் போட்டி கான்பூர் மைதானத்தில் இன்றைய தினம் தொடங்கியது. டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

போட்டியின்போது பார்வையாளராக வந்திருந்த வங்கதேசஅணியின்தீவிரரசிகராகஅறியப்படும்டைகர் ராபிஎன்பவரைஇந்தியஅணிரசிகர்கள்தாக்கியுள்ளதாகத் தெரிகிறது. இதனால் படுகாயமடைந்துள்ள டைகர் ராபி அங்கிருந்து செக்கியூரிட்டிகளால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தனது முதுகிலும் அடிவயிற்றிலும் அவர்கள் அடித்ததாகவும் அவர்களிடம் இருந்து தப்பிக்க பால்கனியில் ஏறிக்கொண்டதாகவும்தன்னால்மூச்சுவிட முடியவில்லைஎன்றும்ராபிகடுமையானவலியில்பேசமுடியாமல் பேசும் வீடியோ வெளியாகியுள்ளது. ஆனால் இந்திய அணி ரசிகர்கள் ராபியை தாக்கினர் என்பதை மைதானத்தில் காவலுக்கு நின்ற உள்ளூர் போலீஸ் மறுத்துள்ளது.

# ஜூனியர் என்டிஆர் கட்அவுட்டுக்கு தீ வைப்பு.. ஆடு பலிக்கொடுத்து தேவரா ரிலீஸ் கொண்டாட்டம்.. சர்ச்சை



ஜூனியர் என்.டி.ஆர்., ஜான்வி கபூர் நடிப்பில் வெளியாகி இருக்கும் புதிய திரைப்படம் "தேவரா." இந்தப் படம் மூலம் ஜூனியர் என்.டி.ஆர். மற்றும் இயக்குநர் கொரட்டலா சிவா இணைந்துள்ளனர். தேவரா படம் மூலம் ஜான்வி கபூர் தென்னிந்திய திரையுலகில் நடிகையாக அறிமுகமாகிறார். உலகளவில் வெளியாகி இருக்கும் தேவரா படத்தின் ரிலீசை ஜூனியர் என்.டி.ஆர். ரசிகர்கள் பெரும் ஆரவாரத்துடன் கொண்டாடினார்.

ஆட்டம், பாட்டம், பெரும் கொண்டாட்டத்தோடு ரிலீசான தேவரா ரசிகர்களின் வரம்பு மீறிய செயல்களால் தேவையற்ற சர்ச்சையில் சிக்கியுள்ளது. தேவரா படம் ரிலீசான திரையரங்க வாயிலில் ஆடு பலியிடப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. திரையரங்கம் முன் ஆட்டை பலியிட்ட ரசிகர்கள் அதன் தலை மற்றும் உடலில் இருந்து சிந்திய இரத்தத்தை தேவரா போஸ்டரின் மீது தேய்த்தனர். இதே போன்று மற்றொரு திரையங்கில் தேவரா படத்தின் கட்அவுட்டுக்கு தீ வைத்தனர். திரைப்பட ரிலீசை ஒட்டி ஆடு பலி கொடுப்பது, கட்அவுட்டுக்கு தீ வைப்பது போன்ற சம்பவங்கள் கொண்டாட்டத்தை மீறி, திரையரங்கு வரும் மற்ற ரசிகர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உள்ளது. மேலும், இத்தகைய சம்பவங்கள் பொது அமைதிக்கு தீங்கு விளைவிக்கும் வாய்ப்புகளும் அதிகம்.

# பயிற்சியில் பும்ரா வீசிய 15 பந்தில் 4 முறை அவுட்டான விராட் கோலி



இந்தியா வங்கதேசஅணிகளுக்கு இடையேயான 2வது டெஸ்ட் போட்டி கான்பூர் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய வங்கதேச அணி முதல் நாள் உணவு இடைவேளை வரை 2 விக்கெட்டுகளை இழந்து 74 ரன்கள் எடுத்துள்ளது.

இந்நிலையில் இந்த போட்டிக்கு முன்னர் வலை பயிற்சியில் ஈடுபட்டு கொண்டிருந்த விராட் கோலிக்கு வேகப்பந்து வீச்சாளர் பும்ரா பந்து வீசினார். 15 பந்துகளில் 4 முறை கோலி அவுட் ஆனார்.

பும்ராவின் 4வது பந்து கோலியின் காலில் பட்டது. உடனே பும்ரா அவுட் என தெரிவிக்க அதனை கோலி ஒப்புக்கொண்டார். இதனால் விரக்தியடைந்த விராட், சுழற்பந்து வீச்சாளர்கள் பந்து வீசிய வலையில் பேட்டிங் செய்தார்.

சுழற்பந்து வீச்சாளர்களும் அவரை தடுமாற வைத்தனர். இறுதியில் அக்சர் படேல் பந்தில் போல்ட் ஆனார். உடனே பயிற்சியே வேண்டாம் என்பது போல வெளியேறினார்.

# பெரிய படத்தில் உதவி இயக்குநரான நடிகை வனிதா

கோல்டன் ஈகிள் ஸ்டூடியோஸ் சார்பில், கோவை பாலாசுப்பிரமணியம் தயாரிப்பில், இயக்குநர் ஏ வெங்கடேஷ் இயக்கியுள்ள புதிய திரைப்படம் "தில் ராஜா." இந்தப் படத்தில், விஜய் சத்யா, ஷெரீன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படம் வருகிற 27 ஆம் தேதி ரிலீசாக இருக்கிறது. விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நடிகை வனிதா பேசும் போது, "விஜய் சத்யாவிற்கும், ஏ வெங்கடேஷ் சாருக்கும், அம்ரீஷுக்கும் என் வாழ்த்துக்கள். அம்ரீஷை அதிகம் வெளியில் பார்த்ததில்லை, இப்போது தான் பார்க்கிறேன். எல்லாப் பாடல்களும் நன்றாக வந்துள்ளது வாழ்த்துக்கள்."

"10 ஆண்டுகளுக்கு முன் என் தந்தையுடன் சண்டை நடந்த போது, மீண்டும் சினிமாவில் நடிக்க நினைத்தேன். அப்போது, ஏ வெங்கடேஷ் சார் தான் நடிக்க வைத்தார். இந்தப்படத்தில் நடிக்க என்னைத் தேடியபோது, நான் சம்பளம் அதிகம் கேட்பதாக சொல்லியிருக்கிறார்கள்." "ஏ வெங்கடேஷ் சார் கேட்ட போது, சார் என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும். நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம், என்றைக்கு என்று சொல்லுங்கள் நான் வருகிறேன் என போய் நடித்தேன். இப்போது நானும் இயக்குநராக மாறியிருக்கிறேன்,

ஒரு பெரிய படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றினேன்." "எனக்கு படம் செய்வதில் உள்ள கஷ்டம் தெரியும். விஜய் சத்யா இந்தப் படத்தை கஷ்டப்பட்டு எடுத்து, இங்கு கொண்டு வந்துள்ளார். செப்டம்பர் 27 ஆம் தேதி இப்படம் வருகிறது. படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்," என்றார்.

# ஆர்சிபி அணி கேப்டனாக ரிஷப் பண்ட்?




வரும் ஐபிஎல் தொடரில் ஆர்சிபி அணியில் இணைய ரிஷப் பண்ட் விருப்பம் தெரிவித்ததாகவும், கேப்டன் பொறுப்பு கேட்டதால் நிர்வாகம் மறுப்பு தெரிவித்துவிட்டதாகவும், இவர் ஆர்சிபிக்கு வருவதில் விராட் கோலிக்கு விருப்பம் இல்லை எனவும் எக்ஸ் பக்கத்தில் ராஜீவ் என்பவர் பதிவிட்டுள்ளார்.

இந்த எக்ஸ் பதிவிற்கு இந்திய வீரர் ரிஷப் பண்ட் காட்டமாக பதிலடி கொடுத்துள்ளார்.

அவரது பதிவில், "சமூக வலைதளங்களில் ஏன் பொய்ச் செய்தியை பரப்புகிறீர்கள்? இது மிகவும் தவறான செயல். தயவு செய்து பொறுப்புடன் செயல்படுங்கள். ஒருபோதும் நம்பிக்கையற்ற சூழலை உருவாக்காதீர்கள். இதுபோன்ற தவறான செய்திகள் பரவுவது ஒன்றும் புதிது கிடையாது. இத்துடன்இதுநிற்கப்போவதும்கிடையாது. நாளுக்கு நாள் இது மோசமாகிக் கொண்டேதான் போகிறது" என்று தெரிவித்துள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.